உ
சிவமயம்

அளவெட்டி, தோரையடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட



அமரர்

# திரு. காசிப்பிள்ளை வைரமுத்து

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26-04-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
10 ◈ 01 ◈ 1942

இறைவன் அடியில்
27 ◈ 03 ◈ 2004

அமரர்

# திரு. காசிப்பிள்ளை வைரமுத்து

அவர்கள்

**திதி வெண்பா**

ஆண்டு சுபானு தைத்திங்கள் ஷஷ்டித் திதியில்
ஈண்டு நமதுள்ளம் துன்புறவே
வேண்டுமன்பர் காசிப்பிள்ளை வைரமுத்து
போற்று தற்குரியவர் இறைவன் கழலடியடைந்தார்
இவ்வுலகைவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அளவெட்டி, தோரையடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. காசிப்பிள்ளை வைரமுத்து


அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 26-04-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ச
# ம
# ர்
# ப்
# ப
# ண
# ம்

அன்பைச் சொரிந்து பண்பை வளர்த்து

உற்ற வழிகாட்டி உலகில் நாமுயர

ஏணிப்படியாய் எம்முடன் இருந்து

எம்மையெல்லாம் மாண்பு பெற வைத்திட்டு

விண்ணுலகேகிய எம் அன்புத் தெய்வத்தின்

பொன்னடிகளில் காணிக்கையாக்குகின்றோம்

இம்மலரினை.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

திரு. காசிப்பிள்ளை வைரமுத்து

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கை மாதாவின் சிரசெனத் திகழும் யாழ்ப்பாணத் திலே மருதநிலச் சிறப்பும், புன்செய் நிலங்களும் அழகு செய்யும் அளவெட்டி எனும் கிராமத்திலே, அணிஞ்சிலடி விநாயக ராலயச் சுற்றாடலிலே, அந்நாட்களில் வேதாரணியத்தில் இருந்து வந்த அந்தணர்கள் மடம் கட்டி குருகுலக் கல்வி கற்று வந்த "தோரையடி" என்ற இடத்திலே உயர் வேளாளர் பரம்பரையில் உதித்தவரும், பர்மாவில் புகையிரத நிலைய அதிபராக இருந்தவருமாகிய காசிப்பிள்ளைக்கும், அவர் மனைவி சின்னம்மாவுக்கும் பிறந்த ஆறு பிள்ளைகளில் முதலாவதாகப் பிறந்தவர் "பிள்ளையக்கா" என்று செல்லமாக அழைக்கப்படும் தனலட்சுமி. இரண்டாவதாக பிறந்தவர் காலஞ்சென்ற டாக்டர் முருகேசம்பிள்ளை. மூன்றாவதாகப் பிறந்தவர் நல்லதம்பி. இம்மூவரும் பர்மாவில் பிறந்தார்கள். நான்காவதாகப் பிறந்தவர் "மணியம்" என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம். ஐந்தாவதாகப் பிறந்தவர் "முத்தர்" என்றழைக்கப்படும் வைரமுத்து. ஆறாவதாகப் பிறந்தவர் சதாசிவம் என்பவீர்.

அன்பான பேச்சு, கனிவான புன்னகை, இளகிய மனம், கண்டவர் எல்லாம் "இவர் ஒரு அப்பாவி" என்று சொல்லக்கூடிய சுபாவம். இவையெல்லாம் பொருந்திய மொத்த வடிவம் தான் "முத்தர்" என்கின்ற வைரமுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியை அளவெட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், பின்னர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் கற்றார்.

மருந்தாளராக கொழும்பு, இரத்தினபுரி, தெல்லிப்பளை வைத்திய சாலைகளிலும், பின்னர் பிரதம மருந்தாளராக பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் வைத்தியசாலையிலும் கடமையாற்றினார். யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கடமையாற்றிய காலங்களில் அநேகமானோர்க்கு உதவிகள் பல செய்தார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி விநாயகமூர்த்தி புனிதவதி தம்பதிகளின் மூத்த மகளான ஸ்ரீஜெகதேவியை மணந்து சிவப்பிரியா என்னும் மகளைப் பெற்றார். சிவப்பிரியா இசைத்துறையில் முதுமானி பட்டம் பெற்று பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக கடமையாற்றி வைரமுத்து குடும்பத்துக்கு பெருமை சேர்த்தார்.

தனது மகள் சிவப்பிரியாவுக்கு திருமணம் செய்வதற்கு உடலாலும், உள்ளத்தாலும் பட்ட கஸ்டத்தினால் தானோ என்னவோ சுழிபுரத்தைச் சேர்ந்த இராசலிங்கம் மீனாட்சி தம்பதிகளின் மகனாகிய, அபுதாபியில் பொறியியலாளராகப் பணிபுரியும் இந்துநேசன் என்பவர் மருமகனாக வந்து வைரமுத்து குடும்பத்துக்கு பெருமை சேர்த்தார். அதுமட்டு மல்லாமல் மாதுமை, வைகுந்தன் என்ற இரட்டைப் பேரப்பிள்ளைகளும் வந்து வைரமுத்து குடும்பத்துக்கு மேலும் பெருமை சேர்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளுடன் அவர் கொஞ்சிவிளையாடிய நாட்களில் அவர் தனது வருத்தத்தில் பாதியை மறந்தே விட்டார். பேரப்பிள்ளைகளுடன் அவர் சந்தோசமாக இருந்த நாட்களில் யாருக்கும் கஷ்டத்தைக் கொடுக்காமலேயே 27.03.2004 அன்று திடீரென அவர் உயிர் பிரிந்தது. அவரைப் பொறுத்தமட்டில் அவர் செய்த பாக்கியமே. ஆனால் மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தவர்கள், எல்லோருக்ம் அவரது திடீர்மறைவு ஒரு பேரிழப்பாகும்.

**'உறங்குவது போலவே இறப்பு, உறங்கி விழிப்பது போலவே பிறப்பு'** அவர் உறங்கி விட்டார். அவர் திரும்ப வரமாட்டார். எனவே அவரின் நினைவுகளோடு நாம் வாழ்வோமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

## ஒரு பிரார்த்தனை

- எங்கு வேதனை உண்டோ அங்கு ஆறுதல் அளிக்கவும்.
- எங்கு வெறுப்புண்டோ அங்கு அன்பு காட்டவும்.
- எங்கு கலக்கமுண்டோ அங்கு நம்பிக்கையூட்டவும்.
- எங்கு அந்தகாரம் உண்டோ அங்கு ஒளி வீசவும்.
- எங்கு துயரம் உண்டோ அங்கு மகிழ்ச்சி அளிக்கவும்.
- என்னை உமது கருவியாக பயன் படுத்தும் இறைவா! மற்றவர்களால் நான் ஆறுதல் பெறாவிட்டாலும் நான் மற்றவர்களை ஆறுதல் படுத்தவும்.
- மற்றவரிடம் பெற்றுக் கொள்ளமாற் போனாலும், நான் மற்றவர்களுக்கு கொடுக்கவும்.
- மற்றவர்கள் என்னில் அன்பு கூராவிட்டாலும் நான் மற்றவர்கள் மீது அன்புகாட்டவும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் ~ விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பின் விதிர் விதித்து உன்
    விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
    வெதும்பி உள்ளம்
பொய் தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
    சய சய போற்றி எனும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
    என்னைக் கண்டு கொள்ளே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
    கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
    மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெர் சிவனைத்
    திருவீழி மீழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
    குளிரவென்கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி யழுதிடப்
    பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
    மன்னிய தில்லை தனுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
    சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீ ழிருக்க என்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணனேயா
ஒப்பிலா மாமணி கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேல் ஆயுதப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்



திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்ததையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மாநந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா வானந்த மளித்
தல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாமுடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த். தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரி பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்தசிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*சிவபுராணம் முற்றிற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கந்த சஷ்டி கவசம்



## காப்பு

*அமரர் இடர்தீர அமரம் புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி*

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம்,
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிட்டையுங் கைகூடும்,
நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந்தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக!வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளிஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டடும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையித் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டாற் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சத்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப்பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாடஎனைத்
தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடனிரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற்க்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க் உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைகோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

நீலமயில் வீற்றிருக்கும் நேசன் திருவருளால்
ஞாலம் சிறக்கும் நனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிராமிபட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாரமர்கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே!

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி அறிந்தனயே

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்தூர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சித்துரானன சுந்தரியே

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்தூர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

கருத்தன எந்ததைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமரையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே

**அபிராமி அந்தாதி முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் நல்லிடம் பெற்றவர்

உயிர்கள் பிறப்பதும், பிறந்த உயிர்கள் இறப்பதும் இப்பூவுலக நியதி. ஆயினும் தோன்றிய உயிர்கள் எல்லாமே எல்லோர் மனதிலும் நினைத்திருக்கக் கூடிய பேற்றினைப் பெறுவதில்லை. இறவா வரம் பெற்று எல்லோர் மனதிலும் நீண்டு நிலைத்திருக்கக் கூடிய அரும் பேற்றினைப் பெற்றவர் தான். "மாயையும் மறுவும் சூழ்ந்த மண்ணுலக வாழ்வை நீத்துப் பற்றற்றான் பதமலர் பற்றிப் பெருவாழ்வு அடைந்திட்ட பிரதம மருந்தாளர் திரு. காசிப்பிள்ளை வைரமுத்து அவர்கள் என்றால் மிகையாகாது.

இவர் இளமை முதல் அளவெட்டி அளகொல்லை பிள்ளையாருக்கு தவறாமல் சென்று வந்தார். இறுதி நாள் அன்றும் வண்ணை கீரிப்பிள்ளையார் ஷஷ்டியன்று காலை வணங்கிவிட்டு வந்த அன்றே "நோயுற்று அடராமல் நொந்து மனம் வாடாமல் பாயிற் கிடவாமல் விக்னேஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களைச் சென்றடைந்தமையே. இவரின் சீர்மை தெரியப்போதும்.

வீட்டுக்கு வந்தோரை இன்முகத்துடன் இனிய சொற்கள் பேசி உபசரிப்பதும், உறவினர்களைச் கண்டால் உச்சி குளிரும். அவர்களை மரியாதை செய்வதிலும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார். அலுவலகத்திலும் பணிவுடனும், பண்புடனும், சகோதரத்துவத்துடன் சமத்துவமாகப் பழகிய பண்பாளர். கால்பந்தாட்டம், இசையினையும் ரசிக்கும் நல்லரசிகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிறப்பில் இவர் போல் இனியவர் ஒருவரை என்று காண்போம் என அங்கலாய்க்கின்றனர் நண்பர்கள்.

எல்லோருடனும் நல்ல உள்ளத்துடனும் அன்பாகப் பழகிவந்த பண்பாளனை இழந்து நிற்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**வி.ஸ்ரீசக்திவேல் J.P.**
**இளைப்பாறிய உதவிக்கல்வி பணிப்பாளர், தலைவர்,**
**யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்**

★ *பிரணவத்திலிருந்து சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபம் பிள்ளையார்.*

★ *தர்மத்துக்காக நியாயத்துக்காக வித்தைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்று தானே தந்தத்தை ஒடித்து தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறார் பிள்ளையார்.*

★ *சமுத்திரமாக இருக்கிற ஸ்வாமி தான் அண்டா, செம்பு, உத்திரணி ஜலமாகவும் இருக்கிறார். தம் சக்தியைச் சிறுசிறு ரூபங்களாகச் செய்து கொண்டு பலவித ஜீவஜந்துக்களாக்கி இருக்கிறார்.*

★ *மனிதனாகும் போது கடவுள் மனம் என்ற ஒன்றைக் கொடுத்து அதை பாவ புண்ணியங்களில் ஈடுபடுத்தி பலனை அனுபவிக்க வைக்கிறார்.*

★ *ஜீவனுக்கு அறிவு வேறு எங்கோ இருந்து வரவில்லை. அந்த பேரறிவின் திவலைதான் என்று தெரிகிறது.*

★ *இருட்டை விரட்டுகின்ற ஞானப்பிரகாசத்தை அடைகின்ற பிரயாசையை நாம் ஒருபோதும் தளரவிடக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உறைவிடம் முத்தர்

(காலச்சக்கரம்)

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்தது அளவெட்டி எனும் கிராமம். சைவமும், தமிழும், இறைபக்தியும் வளர்க்கும் திருநிலம். அங்கு வாழ்ந்த திரு. காசிப்பிள்ளை என்ற பெருந்தகை பொருள் வளம் பெருக்கும் பெரும் பணிக்காக ரங்கூன், மா நகருக்கு புகையிரதநிலைய அதிபராகச் சென்றார். இவர் சின்னம்மா என்ற மாண்புறு மனையாளுடன் இல்லறம் நடத்தியதன் பயனாக ஐந்தாவது மகவாக உதித்தவர் தான் அமரத்துவம் அடைந்த திரு. வைரமுத்து அவர்கள். இவருடன் உடன் பிறந்தோராக ஆருயிர் சகோதரி தனலட்சுமியுடன் இறைபதமடைந்த டாக்டர் முருகேசபிள்ளை, நல்லதம்பி அவர்களுடன் திரு. சுப்பிரமணியம் (பொறியியலாளர்) திரு. சதாசிவம் ஆகியோரை பாசமிகு சகோதரர்களாகவும் பெறும் பாக்கியம் பெற்றார்.

இவர் இளமை முதலே விநாயகர் பால் மாறாத பக்தி கொண்டு சிரமம் தவறாது வழிபட்டு வந்தவர். இவர் தனது ஆரம்ப காலக் கல்வியை அளவெட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், உயர்கல்வியை அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் தொடர்ந்து பின்னர் மருத்துவத்துறையின் மேல் கொண்ட நாட்டம் காரணமாக மருத்துவக் கல்லூரியிலும் மருந்தாளர் (pharmacist) பயிற்சி முடித்து கொழும்பு அரசினர் வைத்தியசாலையிலும், இரத்தினபுரி அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையிலும் பின்னர் தனது இறுதிக் காலம் வரை யாழ் போதனா வைத்தியசாலையிலும் பிரதம மருந்தாளராகக் கடமையாற்றி 2002ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் கல்விகற்ற போது ஓர் சிறந்த விளையாட்டு வீரனாகவும் கால்பந்து அணியின் உறுப்பினராக மருத்துவக் கல்லூரிக்காக விளையாடிய பெருமையும் உண்டு. இவ்வாறு சிறப்புற வாழ்ந்து வந்த காலத்தில் 1972ம் ஆண்டு யாழ். பிரபல குழந்தை வைத்திய நிபுணராகத் திகழ்ந்த டாக்டர் நாகலிங்கம் விநாயகமூர்த்தி புனிதவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி ஸ்ரீஜெகதேவியை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லறம் நடத்திவந்ததன் பயனாக சிவப்பிரியா என்ற பெண் மகவைப் பெறும் வாய்ப்புப் பெற்றார். ஏற்கனவே தனக்கு இருந்து வந்த இசையார்வத்தை பூர்த்திசெய்யுமுகமாக சிவப்பிரியாவை சங்கீதத்துறையில் ஈடுபாடடையச் செய்து யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் சிறப்புச் சித்தி பெற்று அங்கு விரிவுரையாளராக நியமனம் பெற்று சிறப்புடன் வாழ்வதைக் கண்டு அளவில்லா மகிழ்வு கொண்டார். அது மட்டுமல்லாது தனது மகள் சிவப்பிரியாவை ஓர் பெருமைசார் இள சங்கீத விற்பன்னராக மிளிரும் பான்மை கண்டு அகமகிழ்ந்தவர். இவ்வாறு சீரும் சிறப்புடன் வாழ இறைவன் தனக்கு அளித்த அருட்கொடையே காரணம் என்று அடிக்கடி கூறுவார். தனது மகளுக்கு ஏற்ற மணவாளனைத் தேடும் படலத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த நெல்லியான் கிராமம் இராசலிங்கம் மீனாட்சிதம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாகிய பொறியியலாளரான இந்துநேசன் அவர்களை மருமகனாக்கி அவர் தம் இல்லறத்தின் பயனாக மாதுமை, வைகுந்தன் என்னும் இரு பேரப்பிள்ளைகளைப் பெற்று மட்டில்லா மகிழ்வில் திளைத்திருந்தார். மனம் போல் மாங்கல்யம் என்பதற்கிணங்க அவருக்கு வாய்த்த மருமகன் "நேசன்" அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் நிறைந்தவராக அமைந்தது பற்றிமனநிறைவும் தனது மக்களுக்கேற்ற மணவாளனாக அமைந்தது இறைவன் அளித்த கொடை என எண்ணி புளகாங்கிதம் அடைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளின் மேல் மட்டற்ற பாசத்துடன் செயற்பட்டவர். அவர்களுடன் விளையாடும் போது தானும் ஒரு குழந்தையாகவே மாறிச் செயற்படுவது பார்ப்பதற்கு மகிழ்வூட்டும் நிகழ்வாகும். துர்க்கை அம்மன் மீது பக்தி கொண்ட இவரின் இல்லறம் சிறக்க இன்பமாய்த் திகழ எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே அமைந்த மங்கை நல்லாள் ஸ்ரீ ஜெகதேவியை அளித்தது இவர் செய்த பாக்கியமாகும். அமரர் எல்லோருக்கும் நல்லவர். களங்கமில்லா அன்புள்ளவர். குழந்தைகளுக்கு குழந்தையாகவும், பெரியோருக்கு பெரியோராகவும் பழகிப் பாசக்கரங்கள் நீட்டி அனைவர் உள்ளங்களையும் கவர்ந்தவர்.

**'நெருநல்உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து உலகு"** - குறள்

'But yesterday a man was and today he is not
that is the warden in this world"

"உயர் பதவி நீ வகித்தாய். ஊக்கமுடன் செயற்பட்டாய், நன்மனையாள் வாய்த்து விட்டால் நலமுடனே வாழ்ந்திடலாம். சிருடன் வாய்த்து விட்டால் சீலமுடன் வாழ்ந்திடலாம். சீருடனும், சிறப்புடனும் சீதேவி வாய்த்ததினால் சீருடன் வாழ்ந்துவிட்டு சிறப்புடன் சென்று விட்டாய் ஐயா!

**அன்பன்**

- ★ *உலகனைத்தும் நாமாகத் தோன்ற வேண்டும். அப்படிப்பட்ட ஞானம் ஒருவனுக்கு அனுபவத்தில் வந்தால் அவன் சண்டாளனாய் இருந்தாலும் அவன் தான் பண்டிதன்.*
- ★ *போட்டி இருக்கிற வரையில் யாருக்கும் மன நிறைவு உண்டாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை

"நேற்று மாலை நான் கல்லூரியின் முன் நின்றபோது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தவர் நின்று என்னுடன் ஒரு சில நிமிடங்கள் பேசிவிட்டுச் சென்றார்" என்று அன்று முத்தரின் இறுதிச் சடங்குகளிற் கலந்து கொள்வதற்காக நான் அங்கு சென்றிருந்தபோது எனக்கருகிலிருந்த யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. வன்னியசிங்கம் அவர்கள் என்னிடம் கூறினார். இவர் காலமாகிவிட்டார் என்ற செய்தியைத் தொலைபேசி மூலம் அன்று கேள்விப்பட்டதும் எங்களுக்கே நம்பமுடியாமலிருந்தது.

**'நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்**
**பெருமையுடைத் திவ்வுலகு"**

என்று வள்ளுவப் பெருந்தகை அன்று அழகாகக் கூறிவைத்தாரே. இதுவே வாழ்வின் நியதி.

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்நகரைப் புக்ககமாகவும் கொண்ட முத்தர் அருணோதயக் கல்லூரியில் படிக்கும் போது கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார். கல்லூரிக் கால்ப்பந்து அணியிலும் ஓர் அங்கத்தவராகத் திகழ்ந்தார். பின் கொழும்பு மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்து மருந்தகவியல் நெறியை முடித்துக்கொண்டு கொழும்பு, தெல்லிப்பளை, இரத்தினபுரி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் மருந்தாளராகக் கடமையாற்றி, ஈற்றில் யாழ் போதனா வைத்தியசாலையில் பிரதம மருந்தாளராகப் பணிபுரிந்து இரண்டு வருடங்களுக்கு முன் ஓய்வுபெற்றார். இவர் தொழில் புரிந்த இடங்களிலெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கௌரவமாகவும், கண்ணியமாகவும் மேலிருந்தவர்களின் மதிப்புக்குப் பாத்திரமாகவும் ஏனைய ஊழியர்களிடம் மிகவும் அன்பாகவும் பழகி வந்தார். இதனால் எல்லோராலும் "முத்தர்" என்று மிகவும் அன்பாக அழைக்கப்பட்டார். அதே போல அன்னாரின் சகோதரர்களிடமும் மற்றைய உறவினர்களிடமும் மிகவும் அந்நியோன்னியமாகவே இருந்து வந்தார்.

மிகவும் அமைதியான சுபாவமும், ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கையையும் கொண்ட இவர் இசையிலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். மேலும் இவருடைய புதல்வி சிவப்பிரியா ஓர் இசை வல்லுனராகவருவதற்கு வழிவகுத்தார். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தனது குடும்பத்தவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் செவ்வனே செய்து முடித்து ஓய்வுபெற்று, பேரப்பிள்ளைகளுடனும் நன்றாக அளவளாவிச் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் திடீரென ஓர் ஈவிரக்கமுமின்றிக் காலன் கவர்ந்து கொண்டான் என்பதை அறிந்ததும் எங்களெல்லோருக்கும் மிகவும் கவலை. என் செய்வது? எல்லாம் அவன் செயல்.

அன்னாரின் மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் ஏனைய உறவினர் யாவருக்கும் இத்தால் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முத்தரின் தூய ஆன்மா முழுமுதற் கடவுளான
அத்தனின் அடிகள் சேர அவனையே வேண்டுவோமே.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**செந்தில்நாதன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பா

**'நெருகல் உளனொருவன் இன்றில்லை எனும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு"**

இந்துமாகடல் சூழ் இலங்கை மா நகரில் சிரமென விளங்கும் வடபுல யாழ் நகரில் புகழ்பூத்த வண்ணார்பண்ணையில் உதித்த காசிப்பிள்ளை வைரமுத்து அவர்களின் மறைவை கேட்டு ஒருகணம் இதயம் நின்று துடித்தது.

எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, இதமான பேச்சு, சிரிப்பான முகம், மாசற்ற நெஞ்சுடன் கடமையாற்றி நேசமுடன் எல்லோர் மனதையும் கொள்ளைகொண்ட குணசீலனே உன் பிரிவு எமை வாட்டுதே.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வகையில் நேற்று எம்மோடு இருந்த வைரமுத்து இன்று எம்முடன் இல்லை. இந்த சோகத்தில் இருந்து நாம் முற்றாக விடுபட வில்லை. பெருமைக்குரியவர்கள் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்ததில்லை. வினைப்பயன் முடிந்து விட்டால் ஆன்மா கணப்பொழுதும் நில்லாது. உற்றார், உறவினர் கண்ணீர் மல்க இறைவனடி சேர்ந்த அமரர் வைரத்து அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**முகாமையாளர்கள், சக ஊழியர்களும்**
**அன்னை நாகா பூட் சிற்றி,**
**அம்பிகை களஞ்சியம், கேமாஸ் மருந்தகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த நீர்மையன்

உறவு தரும் நெருக்கம் நீடிய தொடர்பின்மையால் நலிந்து விடும். கம்பிர்தாயஸ்கள் மெல்ல மெல்ல வழக்கற்றுப் போகின்றன.

மேலை நாட்டுத் தொடர்பால் எமது பாரம்பரிய விழுமியங்கள் எம்மைவிட்டுப் போய்க்கொண்டிருப்பதையும் உணர்கிறோம். உலகம் கிராமமாகிக் கொண்டு வருவது உண்மை தான். ஆனால் நெருங்கிநின்று நிழல் தந்து மனித வாழ்வை வளம் படுத்த வேண்டிய ஒன்று. அந்தோ எம்மை விட்டு விலகிப் போகிறதே. அது தான் அன்பு. வணிக நோக்கமற்ற தூய அன்பு காரணம் கற்பிக்க முடியாத ஓர் ஈர்ப்பு.

இது தேவதேவன் திருக்குணத்தொன்று. இது தூய அன்பு. ஈர்ப்பு ஒரு மனிதனிடம் காணப்பட்டால் ஆச்சரியமன்றோ. இந்த அன்பால் என்னை ஈர்த்த ஒரு மனிதன் கடந்த 27.03.2004 அன்று தேவனாகி விட்டார்.

இல்லை! தேவர்களும் அன்பு செய்யத் தெரியாதவர்களே! சிவத்தோடு கலந்து விட்டார். இத்தனை மென்மையாகவும் பேசமுடியுமா? இத்தனை இனிமையாகச் சிரிக்க முடியுமா? "கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பு" என்றார் அப்பர் பெருமான். "இதை சிரித்தாறு" என்றான் கம்பன்.

இப்பேரிலக்கியப் பெரும் சொற்களின் செம்மார்ந்த கருத்தை உணர்த்தியபெருமனிதன் வைரமுத்து என்றும் நெஞ்சில் நிலைத்து நிற்பார். ஆயிரத்தில் ஒருவன் என்பார்களே? வைரமுத்து பதினாயிரத்தில் ஒருவர்.

ஐய! நீ சிவனடி பெற்றனை. எமக்காகவும் அந்த நஞ்சுண்ட கண்டத்தானிடம் ஒரு வார்த்தை சொல்லிவை.

**க. சிவராமலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலியுரை

அமரர் காசிப்பிள்ளை வைரமுத்து அவர்களது அறிமுகம் எனக்கு 1969ம் ஆண்டு ஆவணி மாதமளவில் ஏற்பட்டது. இருந்தும் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு 1994ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதியில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் கிடைத்தது. அந்த தொடர்பு அவர் அமரர் ஆகும் வரை நீடித்தது. அவரில் இருந்து நான் அவதானித்தவை, மிகவும் அடக்கமானவர், பொறுமைசாலி, எதற்கும் கோபப்படமாட்டார், எதையும் நிதானமாக சிந்தித்து செய்பவர். அவருக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நிறைந்த அறிவு இருந்தது. இதனால் சுகாதார அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், அரச மருந்து களஞ்சியம் ஆகிய பகுதிகளில் இருந்து வரும் சுற்றுநிருபங்களை விளங்கி செயற்படுத்துவதற்கு எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தார்.

எங்களுடைய தொழிலைப் பொறுத்தவரை 1995ம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் யாழ். போதனா வைத்தியசாலை இடம்பெயர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கிய காலமும், 1996ம் ஆண்டு மேமாத முற்பகுதியில் திரும்பி வந்து மீண்டும் ஆரம்பித்த காலமும் மிகவும் நெருக்கடியான காலம். எல்லாம் குழம்பி இருந்த நிலை. இந்த நேரத்தில் இவரது ஆலோசனை, வழிகாட்டல், எங்கள் பகுதி நிர்வாகத்தை திரும்ப ஸ்தாபிப்பதற்கு பெரிதும் உதவின. அவருக்கு இருந்த வைத்திய அறிவும், பொது அறிவும் கூட எங்கள் தொழிலை இலகுவாக, சரியாக செய்வதற்கு உதவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மருந்தாளராக அரச சேவையில் சேர்ந்த இவர் இலங்கையின் பல வைத்தியசாலைகளில் சேவை ஆற்றிய பின்பு இறுதியில் யாழ் போதனா வைத்தியசாலையில் தனது சேவையை முடித்துக் கொண்டார். இவரது சிறந்த சேவை காரணமாக தரம் 1க்கும், பின்பு விஷேட தரத்திற்கும் பதவி உயர்வு பெற்றார். இறுதியாக மருந்தாளர் அத்தியட்சகராக சிறிது காலம் கடமையாற்றிய பின்பு 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி ஓய்வு பெற்றார். இவருடன் கடைசியாக 25.03.2004ம் திகதி பி.ப. 12.30 மணியளவில் கதைத்தேன். அப்போது அவரது உடல் ஆரோக்கியம் மிகவும் நல்ல நிலையில் இருந்ததை அவதானித்தேன். எனினும் தெய்வபக்தி உடைய இவரை 27.03.2004ம் திகதி மதியவேளை இறைவன் தன்னுடன் திடீர் என அணைத்துக் கொண்டார் என்ற செய்தியை அன்று மாலை அறிந்தவுடன் திகைப்பாக இருந்தது.

அவரது மறைவால் துயருற்று இருக்கும் அவரது மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரி ஆகியோருடன்நானும் துயர் பகிர்ந்து கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**மா. குமாரசுவாமி**
**இளைப்பாறிய பிரதம மருந்தாளர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.
- முதலில் கீழ்ப்படிதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளை யிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
- பிரமச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லா விதமான கல்வி அறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் ஸ்ரீ வைரமுத்து பற்றிய சில நினைவலைகள்

தம்பி வைரமுத்து அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி உதயன் நாளிதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தும், நான் அவர் மறைவு பற்றி அறிந்தது சில நாட்களுக்கு முன்னர் தான்.

யான் ஆசிரியனாக சுமார் நாற்பது வருடங்களுக்கு மேல் கடமையாற்றியிருக்கின்றேன். எனது ஆசிரிய சேவைக் காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் என்னிடம் கல்வி கற்றிருக்கலாம். அங்ஙனம் கல்வி கற்றவர்கள் அனைவரதும் குணா குணங்களை யான் இப்போ ஞாபகம் கூரமுடியாது. ஆனால் சிற்சிலரை மறந்ததுமில்லை. அத்தகையவர்களுள் ஒருவர் தான் தம்பி வைரமுத்துவும்.

மாணவப் பருவத்தில் சிலர் அட்டா துட்டித்தனம் மிகுந்துள்ளவர்களாக இருந்திருப்பர். பின் வளர வளர அவற்றினின்றும் விடுபட்டு நல்லவர்களாக வாழ்வர். முத்து ஒரு தனி ரகம். தானும் தன்பாடும். இப்படிக் கூறுவதினால் அவர் ஒரு சுய நலவாதி எனக் கருதற்க. அமைதி, அடக்கத்திற்கு ஒரு பொக்கிஷம். எப்போதும் பற்கள் வெளியே தெரியாதபடி புன்சிரிப்புத்தவழும் முகம்.

அரசினர் வைத்தியசாலையில் உத்தியோகம் பார்க்கும் போதும், வெளிப்பகட்டுக்காக, மதிப்பிற்காக தன் உத்தியோக எல்லையைத் துஷ்பிரயோகம் செய்ததில்லை. எங்கெங்கு உதவி செய்ய முடியுமோ, அங்கங்கெல்லாம் உதவப் பின்நிற்கவும் மாட்டார். இப்படியான நிலைமை உயர்ந்த ஒரு நற்பண்பே என யான் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சாகக்கூடிய வயதினரல்லர். இளமையில் மறைந்து விட்டார். அது துக்கத்திற்கிடனே. நோய் வாய்ப்பட்டு சில நாட்களேனும் கிடந்து அழுந்தியவருமல்லர். தனது மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் சிறப்புற நிறைவேற்றி இரு பேரப்பிள்ளைகளையும் கண்டு களித்து விட்டார். அவரது மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் இவரது மறைவு இவ்வண்ணம் திடீரென நிகழுமென கனவிலும் நினைக்காத பிரகாரம் நிகழ்ந்தது. பிறருக்கு எவ்விதத்திலும் மறந்தும் தீமை நினைக்காத, செய்யாத ஒரு புனித உயிர், தன்னால் ஆற்றவேண்டிய கடமைகளைப் பிறருக்குப் பாரமாக விடாது, தானே இனிது நிறைவேற்றி விட்டுத் திடீரென மறைந்து விட்டது.

இளமையில் மரிப்பவர்கள் நல்ல புண்ணிய ஆத்மாக்கள் என்ற ஐதீகத்திற்கிணங்கத் தம்பி வைரமுத்துவும் இளமையிலேயே அமரராகி விட்டார். மறைந்து விட்டாலும் அவரது முகமலர்ச்சியும், மலர்ச்சியில் மிளிரும் புன்சிரிப்பும் அவரோடு நெருங்கிப் பழகியோரது நினைவை விட்டு இலகுவில் மறையாது.

அத்தகைய தம்பியின் ஆன்மா அன்னாரது குலதெய்வ மாகிய அணிஞ்சிலடிப் பிள்ளையாரது திருவடிகளில் சங்கமித்து ஆனந்தமயமாக நிலவுவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டாம்**
**நமக்கும் அதுவழியே நாம் போமளவும்**
**எமக்கு என்ன என்று இட்டுண்டு இரும்.**

**ஆசிரியர்**
**அ. விஸ்வநாதன் அவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மருமகன்

முத்தர் என்று எல்லோராலும் அழைக்கப்படும் என் அன்பான மருமகன். மருமகனானாலும் மகன் போலவே தான் நடந்து கொள்வார். அவரின் மறைவை அறிந்ததும் மிகவும் துயரமாக இருந்தது. எனது நோய் காரணமாக அவரது மரணச்சடங்கில் கலந்துகொண்டு அவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தக் கூட முடியவில்லை என்பதும் மிகவும் கவலையாகவுள்ளது.

அவர் மிகவும் நல்ல குணம் படைத்தவர். அமைதியே உருவானவர். மிக அன்பாக எல்லோருடனும் பழகும் சுபாவம் உள்ளவர் என்பதால் அவர் எல்லோர் மனங்களிலும் நிறைந்திருந்தார். முத்தர் சங்கீதப் பிரியர். சங்கீதத்தை தன்னை மறந்து ரசித்துக்கொண்டிருப்பார். அவருக்கு ஒரே மகள். அவவையும் சங்கீதம் கற்பித்து விற்பன்னராக்கினார். அவவும் அவரின் விருப்பப்படியே படித்துப் பட்டம் பெற்று சங்கீதக் கலையில் முன்னேற்றமடைந்து அவரை மகிழ்வித்தார். உத்தமமான பொறியியலாளர் வரனைத் தேர்ந்து மகளுக்கு மணம் முடித்து வைத்து மனம் மகிழ்ந்தார். அவருக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு பேரக்குழந்தைகளை இறைவன் கொடுத்தருளினார். தினமும் அவர்களைச் சீராட்டி மகிழ்ந்திருப்பது தான் அன்னாரது முதல் கடமை என்பது போலத் தன்மை மறந்து அம்மழலைகளோடு தானும் ஒரு குழந்தையாகி விளையாடிக் கொண்டிருப்பார். எல்லோருக்கும் மாறாத கவலையைத் தந்து விட்டு நிம்மதியாக இறைவனடி சேர்ந்து விட்டார்.

"இன்றிருப்பார் நாளை இருப்பரென்னவோ திடமிலையே" என்று தாயுமானவர் பாடியுள்ளார். "நாளையென்றொரு நாள் வருமா" என்று இன்னொருவர் பாடியுள்ளார். இவற்றை யறிந்து தான் கடைசிக் காலத்தில் அவரின் நடவடிக்கை இருந்ததா என்று எண்ணத் தோன்றுகின்றது. என் அன்பு மருமகனின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**மாமியார் : திருமதி. புனிதவதி விநாயகமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மைத்துனர்

எனது மைத்துனர் வைரமுத்தர் (முத்தர்) அவர்கள் திடீர் மரணமானதை அறிந்து உடனே நானும் மனைவியும் யாழ் விரைந்தோம். அவரை உயிருடன் பார்ப்பதற்கு நாங்கள் கொடுத்து வைக்கவில்லை என்று நினைக்கும் போது மிகவும் கவலையாக உள்ளது. அவர் ஒரு முறை வேலைமாற்றமாகி கொழும்பிற்கு வந்தார். அப்போது சிலகாலம் எங்களுடன் இருந்தார். அந்த சில மாதங்களை எங்களால் மறக்கவே முடியாதபடி அவர் எங்களுடன் அன்னியோன்னியமாகி விட்டார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் இனிய சுபாவமும், எப்போதும் சிரித்த முகத்துடன் பேசிப்பழகுவதி னாலும் அவர் எல்லோரையும் எளிதில் கவர்ந்துவிடுவார். அவர் மருந்தாளனாக வேலையேற்று படிப்படியாக உயர்ந்து பிரதம மருந்தாளராக உயர்பதவி வகுத்தார். பல காலம் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றார். அவரின் திடீர் மறைவு எல்லோருக்கும் கவலையளிக்கிறது. எனது மக்களும் முத்தர் மாமா என்று அன்புடன் அவருடன் பழகுவார்கள். நிறைந்த தெய்வபக்தியுள்ள அவர் விநாயகப் பெருமானில் அளவற்ற பக்தியும், நம்பிக்கையும் கொண்டவர். என் அன்பு மைத்துனரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**மைத்துனர்**
**வி. ஸ்ரீமயூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவின் குறிப்பேட்டிலிருந்து சில.....

1. எனக்குள்ளே நீ புகுந்து என்னை நீ ஆக்கு என ஆண்டவனிடம் அடிபணிந்தால் நீ அவனாகிவிட முடியும்.

2. ஆலயத்திற்குப் போகும் எல்லோரும்பக்தர்களும் அல்ல, ஆலயத்திற்குப் போகாத எல்லோரும் நாஸ்திகர்களும் அல்ல.

3. உன் உடல் அசுத்தம் உன் உடம்பையே கெடுக்கும், உன் உள அசுத்தம் உன்னையே கெடுத்துவிடும்.

4. மற்றவனை நீ ஏமாற்றும் போது நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய் என்பதைப் புரிந்துகொள்.

5. ஐந்து விரல்களையும் ஒன்றாக்கி ஒருமைப்படுத்தும் போது கையிலே புஷ்டி வந்து உன் கைப்பலத்தால் எதையும் சாதிக்கக்கூடிய பலம் வருகிறது. அதேபோல ஐம்புலன் களையும் ஒருமைப்படுத்துவதனால் மனதில் ஆன்மபலம் மேலோங்குகிறது.

6. நாம் இறைவனைத் தேடுகின்றோம். ஆனால் இறைவனோ நம் உள்ளத்திலே வீற்றிருந்து நம்மைத் தேடுகிறார்.

7. நம்மை நாமே உணர்ந்தால் நாம் இறைவனை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கற்சிலைக்கு பூவினால் பூசைசெய்து அதில் இறைவனைக் காணும் நாம் நம் கல் மனதிற்கு நற்சிந்தனையாகிய பூவினால் பூசை செய்து அங்கே இறைவனைக் காணா விட்டால் நம்கோவில் வழிபாட்டில் அர்த்தமில்லை.

9. நான் எனது என்பன ஒழிந்தால் இறைவன் நம் உள்ளத்திலே பிரகாசிப்பான்.

10. நாம் எமது ஐம்புலன்களையும் அலையவிட்டும் பெறும் இன்பம் சிற்றின்பம். அவற்றை அடக்கிப் பெறும் இன்பமோ பேரின்பம்.

11. நல்லதைச் செய்து, செய்த பாவத்திற்காக மனதார அழுது திருந்தினால் இறைவன் நம்மை ஆட்கொள்வான்.

12. நாம் இறுதியில் கொண்டு செல்ல இருக்கும் பெரிய சொத்து பாப மூட்டையா? புண்ணிய மூட்டையா? என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.

13. நமக்கு நாமே நீதிபதியாகும் பக்குவ நிலையை அடைய வேண்டும்.

14. மனிதன் மிருகமாகலாம். மிருகம் இறைவனாகலாம்.

15. நம்முடனே உள்ள இறைவனை மதங்கள் மூலம் பிரிக்க முடியாது.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**அன்பு மகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரண்ணா ஒரு நிறைகுடம்

ஒருவர் பிறக்கும் போதே அவரது இறப்பு நிச்சயமாகி விடுகின்ற நியதி எல்லோரும் அறிந்ததே. ஆனால் ஒருவர் எப்படி வாழ்ந்து காட்டினார் என்பது பற்றி மற்றவர்கள் அறிந்திருப்பது அவரவரின் ஈடேற்றத்திற்கு மிக அவசிய மாகும். நல்லார் ஒருவர் வாழ்ந்து காட்டிய பாதை எமக்கு எமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வதற்கு ஒளி விளக்காய் அமையும். இந்த வகையில் ஒரு நல்ல மானுடம், ஒரு நல் இல்லறத்தான், ஒரு நல் சேவையாளன், ஒரு ஆழ்ந்த இறை அன்பர், ஒரு நல்ல கால் பந்து வீரன், ஒரு நல்ல சங்கீத ரசிகன், ஏன் ஒரு அப்பாவி நல்ல மனிதர் என்றும் கூட ஊர் உலகத்தவர்களால் அன்பாக அழைக்கப்பட்டு அண்மையில் இறைபதம் அடைந்த ஸ்ரீ காசிப்பிள்ளை வைரமுத்து அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதை மிக உன்னதமானது. இன்னார் தமது பெயருக்கு ஏற்ற பெருந்தகை என்பது அன்னாருடன் நன்கு பழகியவர்கள் அறிவர். வைரமுத்து வைரமான "ஆழி முத்தாகவே" கடைநாள் வரை வாழ்ந்து காட்டினார். இவர் அன்பான சுபாவமுடையவராக இருந்த போதும், பெயருக்கேற்ப வைராக்கிய குணம் உடையவராக இருந்தார் என்பது உண்மை. போகவேண்டிய இடத்தை நன்கு அறிந்திருந் தமையினால் அதற்கென இறைவனை ஒரு முகமாக நாடினாரே தவிர வீண்பகட்டு வாழ்க்கையிலும், ஆடம்பரங்களிலும் இருந்து ஒதுங்கி தமக்கென வாழ்க்கைப் பாதையை அமைப்பதில் வைரமாக இருந்தார். போலிகளைக் கண்டு ஏமாறாத இவர் எப்பொழுதும் எளிமையான உடை, உணவுகளில் விருப்புக் கொண்டவர். ஒரு கட்டுப்பாடான இல்வாழ்க்கை வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைரமான உத்வேகம் கொண்டவர் தான் இந்த வைரமுத்து அண்ணா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த "முத்தர்" என்று அழைக்கப்படும் முத்தர் அண்ணாவை எனக்கு சிறு வயது முதல் நன்கு தெரியும். உறவினர் என்ற வகையைவிட ஒரு நண்பர் போலவே இவருடன் என்றும் நான் பழகிவந்துள்ளேன். இவர் கல்லூரியில் படிக்கும் காலத்தில், இவரும் இவரது நண்பர்களும் கால் பந்து விளையாடும் போது மைதானத்தை தாண்டி வெளியில் செல்லும் பந்துகளை எடுத்துக் கொடுக்கும் சிறுவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். விளையாட்டு முடிந்ததும் பந்தை எங்களிடம் தந்து எங்களையும் கால்பந்தாட்டம் பழகும்படி ஊக்குவித்தவர்களில் முத்தர் அண்ணாவும் ஒருவர். முத்தரண்ணா ஒரு சங்கீதப் பிரியர். ஏன் ஒரு சங்கீதப் பைத்தியம் என்று கூடச் சொல்லலாம். அந்தக் காலத்தில் அளவெட்டிக் கிராமத்தில் "கும்பிழாவளை" "அளகொல்லை" போன்ற கோயில்களில் திருவிழாக்காலம் என்றால் முத்தர் அண்ணா மேடைக்கருகில் இருந்து நாதஸ்வரக் கச்சேரியை ரசித்துக் கொண்டிருப்பதை காணலாம். அதே காட்சியை அண்மையில் நல்லூர் முருகன் கோயில் வீதியில் குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசை நிகழ்வின் போதும் பார்த்தேன். முத்தர் அண்ணா மேடையருகே முதல் வரிசையில் அமர்ந்து வயலின் இசையில் தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தது எனக்கு பழைய நினைவுகளைத் தூண்டியது.

மிகையான இறைபக்தி, ஆழ்ந்த இசை ஞானம் கொண்ட இவர் ஒரு இளகிய மனம் படைத்த சேவையாளன். பிரதம மருந்தாளராக இருந்த போது யாழ் போதனா வைத்திய சாலையிலும், கொழும்பு வைத்தியசாலையிலும் நோயுற்று செல்லும் பலருக்கும் பலவிதத்தில் தானாகவே முன்வந்து உதவிகள் செய்வார். இந்த வகையில் முத்தர் அண்ணா எனது குடும்பத்தவர்களுக்கு யாழ் வைத்தியசாலையில் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகள் கணக்கிலடங்கா. குறிப்பாக எனது தமையனார் அவர்கள் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் இருந்த போது, எந்நேரமும் யாழ் கோட்டைப் பகுதியிலிருந்து யாழ் நகரை நோக்கி எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்ட அந்தப் பயங்கரமான காலகட்டத்தில் முத்தர் அண்ணா செய்த உதவிகளை என் குடும்பத்தவர் எவருமே என்றுமே மறக்க மாட்டார்கள். முத்தரண்ணாவின் அன்பினாலும், தினமும் அவர் கூறிய ஆறுதல் வார்த்தைகளினாலும் தான் எனது தமையனார் உயிர் பிழைத்தார் என்று எண்ணத் தோன்றும்.

தனது ஒரே மகள் மேல்அளவற்ற பாசம் கொண்ட அவர், தனது புதல்வி பெரிய சங்கீத மேதையாக வேண்டும் என்ற நோக்குடன் சங்கீதம் கற்பித்து அவரை பட்டதாரியாக்கி அவர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்று வதையும், அவரது பல இசைக் கச்சேரிகளையும் கண்டு மகிழ்ந்தார். சிறந்த சங்கீத ஞானமும், இனிமையான குரல்வளமும் நிறைந்த அவரது மகள் மென்மேலும் சங்கீதக் கலையை வளர்த்து தமது தந்தையாரின் ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எமது விருப்பம். நல்ல வரனைத்தேடி மகளுக்கு மணம் செய்துவைத்து இரு பேரப்பிள்ளைகளோடு மகிழ்ந்திருக்கும் வேளையில் அவர் எம்மை விட்டுப் பிரிந்தது ஆழ்ந்த கவலை.

ஒரு நல்ல மனிதர், ஒரு நல்ல நண்பர், ஒரு நல்ல அண்ணா தமது கடமைகளைத் திருப்திகரமாகச் செய்து முடித்துவிட்டு இவ்வுலகவாழ்வை நிறைவு செய்து வானுறையும் தெய்வத்துடன் சங்கமமாகிவிட்டார். அவரின் பிரிவைத் தாங்கடியாமல் தினம் முத்துக்களாகக் கண்ணீர் சொரியும் முத்தர் அண்ணாவின் குடும்பத்தவர்களுக்கு மன அமைதியை இறைவன் தந்தருள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி என்றால் முத்தர் அண்ணா
எழிமை என்றால் முத்தர் அண்ணா
புன்சிரிப்பென்றால் முத்தர் அண்ணா

இந்த அண்ணன் வைரமுத்துவின் ஆத்மா அந்த இறை முத்தான பரம்பொருளில் சங்கமித்து சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

The Eternal has no birth and death, no beginning,
no middle nor end; it does not die, it is not born,
it can never be destroyed; it is the witness, the Self, the Atma.

- Baba

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**நவரத்தினம் சிவபாலன்**

- நீ எல்லை அற்றவன். மரணமற்றவன். பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால் நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக் கொள். எழுந்து நின்று போராடு.
- மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு. அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில் தான் அடங்கியிருக்கிறது.
- நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்துவிடு.
- மனிதனே மேலானவன், எல்லா மிருகங்களை விடவும் எல்லாத் தேவர்களை விடவும் மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் யாருமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம்மை விட்டுப் பிரிந்து இறையடியெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்களுக்கும், வாடி நின்ற எம்மைத் தேடி வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி விடுத்தோருக்கும், தந்திகள் மூலம் துயரில் பங்கு கொண்டோருக்கும், மாலைகள் வழங்கி துயரில் பங்கெடுத்த அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் நினைவாக இன்று இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றிய நல்லுள்ளங்களுக்கும் கிரியைகளில் பங்குபற்றி நடாத்திவைத்த சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் இந்நினைவுக் காணிக்கையை வெளியிட பிரசுரங்கள் தந்துதவியவர்களுக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிலையத்தினருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கித் தோளோடு தோள் நின்றுதவும் நண்பர்கள், பெரியோர்கள் யாவருக்கும் எமது உள்ளத்தால் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

அளவெட்டி.
வண்ணார்பண்ணை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



Printers, Jaffna. T.P:-021-222277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org